# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **சிறந்த தொடர்கள் - சிறப்புப் பெயர்கள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# சிறந்த தொடர்கள்- சிறப்புப் பெயர்கள்

## பாரதியார்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | சுப்பிரமணியன் |
| ஊர் | - | எட்டையபுரம் (தூத்துக்குடி மாவட்டம்) |
| பெற்றோர் | - | சின்னசாமி, இலக்குமி அம்மையார் |
| காலம் | - | 11-12-1882 முதல் 11-09-1921 வரை (39 வயது) |
| மனைவி | - | செல்லம்மாள் |
| இயற்றிய நூல்கள் | - | புதிய ஆத்திசூடி (அச்சம் தவிர்), பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, பாப்பாபாட்டு, தமிழ்த்தாய், சுதேச கீதங்கள், பாரதநாடு, செந்தமிழ் நாடு, முருகன்பாட்டு, விநாயகர் நான் மணிமாலை, கண்ணன்பாட்டு, ஞானரதம், சந்திரிகையின்கதை, தராசு, ஆறில் ஒரு பங்கு, நவதந்திரக் கதைகள், திருக்குறளுக்கு உரை |
| உரைநடை நூல்கள் | - | திண்டிம சாஸ்திரி, சொர்ணகுமாரி |
| சிறப்பு பெயர்கள் | - | தேசியகவி, மகாகவி, விடுதலைக் கவி, பாட்டுக்கொரு புலவன் பாரதி, நீடுதுயில் நீக்கப்பாடி வந்த நிலா, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி, தனக்கு தானே வைத்து கொண்ட பெயர் ஷெல்லிதாசன், காளிதாசன்,சக்திதாசன், நித்தியதீரர், சாவித்திரி ஓர் உத்தம தேசாபிமானி, முன்னறிப் புலவர், புதுக்கவிதையின் தந்தை, சீட்டுக்கவி, அமரகவி, பைந்தமிழ் தேர்ப்பாகன், செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை |

- கலைமகள் எனும் பொருள் தரும் பாரதி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர் - பாரதியார்.
- 1893 ல் எட்டையப்புர சமஸ்தான புலவர்களால் 11ஆம் வயதில் பாரதி என்ற பட்டம் பெற்றவர் - பாரதியார்.
- தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், வங்காளம், பிரெஞ்சு, அரபு போன்ற மொழிகளில் புலமை பெற்றவர் -பாரதியார்.
- 1898 முதல் 1902 வரை காசியில் வாழ்ந்தார்.
- ஞானரதம் தமிழில் தோன்றிய முதல் உரைநடை காவியம் ஆகும்.
- குயில் பாட்டு இசைப்பாடல் நூலாகும்.
- பாரதியார் 7 வயது முதலாகவே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

- 11 வயது நிரம்பிய சுப்பையா, எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்களின் பற்பல சோதனைகளில் வெற்றி பெற்றதால், அப்புலவர்கள் வியந்து அளித்த பட்டம் பாரதி.
- பாரதி என்ற சொல்லுக்கு சரஸ்வதி (கலைமகள்) என்று பொருள். அறிவில் சிறந்த இல்லறத்தார்க்குக் கொடுக்கப்படும் பட்டம் பாரதி.
- 1894-1897 வரை திருநெல்வேலி ஹிந்து கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் 5-ம் வகுப்பு வரை படித்தார். படிக்கும்போது 14 வயதிலேயே, அக்கால வழக்கப்படி, 7 வயது நிரம்பிய செல்லம்மாளை திருமணம் செய்து கொண்டார்.
- வறுமை காரணமாக காசிக்குச் சென்று அலகாபாத் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சமஸ்கிருதத்தையும், இந்தியையும் கற்றார்.
- காசியில் தான் பாரதியாருக்கு தலைப்பாகை கட்டும் பழக்கமும், மீசை வைத்துக் கொள்ளும் வழக்கமும் ஏற்பட்டது.
- பின் எட்டயபுரம் மன்னரின் அழைப்பை ஏற்று, சில காலம் அரண்மனைக் கவிஞராகப் பணியாற்றினார்.
- அப்போது தான் மதுரையில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த விவேக பானு என்ற பத்திரிகையில் இவரது முதல் பாடல் தனிமை இரக்கம் அச்சாகி வெளியிடப்பட்டது.
- 1904-ல் மதுரையில் உள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் (2 மாதங்கள்) பணியாற்றினார்.
- நவம்பர் 1904-ல் சென்னையில் இருந்து வெளிவரும் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு உதவி ஆசிரியரானார். பின்பு சக்கரவர்த்தி பத்திரிகையின் ஆசிரியராக ஆனார்.
- 1905 முதல் பாரதியார் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். 1906-ல் சென்னையில் இருந்து இந்தியா என்ற வாரப் பத்திரிகை துவங்கி தனது அரசியல் கருத்துக்களை மக்களிடையே பரப்பினார்.
- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யுடன் பாரதிக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. சகோதரி நிவேதிதாவைச் சந்தித்த பாரதி, அவரையே தனது ஞான குருவாக ஏற்றுக் கொண்டார்.
- 1907-ல் சூரத் பிளவுக்குப் பின் காங்கிரசில் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் இடையே கருத்து வேறுபாட்டில், திலகர் தலைமையிலான தீவிரவாதிகள் பக்கம் நின்று பாரதி பணியாற்றினார்.
- திலகர், லாலா லஜபதி ராய், அரவிந்தர் முதலியோரை பாரதி சந்தித்தார்.
- 1908-ல் கிருஷ்ணசாமி அய்யர் என்பவர் வெளியிட்ட சுதேச கீதங்கள் என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பு ஒன்றை பாரதியார் வெளியிட்டார்.
- இந்தியா பத்திரிகையில் வெளிவந்த ஆட்சேபகரமான கட்டுரைகள் காரணமாக இந்தியா பத்திரிகையின் சட்டரீதியான ஆசிரியர் கைது செய்யப்பட்டு, பாரதியார் மீது வாரண்ட் போடப்பட்டது. பாரதி தலைமறைவானார். புதுச்சேரி தலைமறைவாக வாழ்ந்தார்.
- 1910-ல் இந்தியா பத்திரிகை தடை செய்யப்பட்டது.
- 1917-ல் பரலி சு.நெல்லையப்பா அவர்கள் கண்ணன் பாட்டு முதற்பதிபபை சென்னையில் வெளியிட்டார்.

- புதுச்சேரி வாழ்க்கையில் ஏற்பட்ட சலிப்பு உணர்வால் பாரதியார் 1918-ல் அங்கிருந்து வெளியேறினார். எனினும் கடலூருக்கு அருகே கைது செய்யப்பபட்டு 34 நாட்கள் சிறைவாசத்திற்குப் பின் விடுதலை செய்யப்பட்டார்.
- 1918 முதல் 1920 வரை கடையத்தில் வாழ்ந்தார். பின் சென்னை வந்தார். சென்னயில் இராஜாஜி அவர்கள் வீட்டில் மகாத்மா காந்தியைச் சந்தித்தார்.
- 1920-ல் மீண்டும் சுதேமித்திரனுக்கு உதவி ஆசிரியரானார்.
- திருவல்லிக்கேணியில் கோயில் யானை ஒன்றினால் தூக்கி எறியப்பட்டு அதிர்ச்சியுற்று, நோய்வாய்ப்பட்ட பாரதியார், 1921 செப்டம்பர் 11-ல் தமது 39-ம் வயதில், உலக வாழ்வில் இருந்து விடுதலை பெற்றார்.

**பத்திரிக்கைப் பணிகள்:-**

- நவம்பர் 1904 முதல் ஆகஸ்ட் 1906 வரை சுதேசமித்திரன் என்ற நாளிதழில் உதவியாசிரியராக பணியாற்றியவர் - பாரதியார்.
- சக்கரவர்த்தினி என்ற மகளிர் மாத இதழை சீனிவாச்சாரியோடு இணைந்து நடத்தியவர் - பாரதியார்.
- இவர் சுதேசமித்திரன் பத்திரிக்கையில் உதவி ஆசிரியராகவும், சக்கரவர்த்தினி (1905) பத்திரிக்கையில் ஆசிரியராகவும், இந்தியா வராப் பத்திரிக்கையில் ஆசிரியராகவும் பணியாற்றினார்.
- சூர்யோதயம், விஜயா, தர்மம் ஆகிய இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றியவர் - பாரதியார்.
- கர்மயோகி, பாலபாரத் (அ) யங் இந்தியா போன்ற ஆங்கில இதழ்களையும் நடத்தினார்.
- இவர் இந்தியா, விஜயா என்ற இதழ்களை வெளியிட்டுள்ளார்.
- பாரதி எழுதிய முதல் பாடல், விவேக பானு என்ற இதழில் 1904 ஆம் ஆண்டு வெளியானது.
- கேலிச்சித்திரம் எனப்படும் கார்ட்டூன் வரையும் முறையை தமிழில் முதன் முதலில் புகுத்தியவர் - பாரதியார்.
- 20 ஆம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டவர் பாரதியார்.
- கவிதையில் சுயசரிதை எழுதிய முதல் கவிஞர் - பாரதியார்.
- தம் பாடலுக்கு தாமே மெட்டிசைத்த முதல் கவிஞர் - பாரதியார்.
- எட்டையபுரம் அரசவைக் கவிஞராக பணியாற்றியவர் - பாரதியார்.
- மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகவும், சென்னையில் இதழாசிரியராகவும் பணியாற்றியவர் - பாரதியார்.
- சென்னை ஜன சங்கம் அமைப்பை தோற்றுவித்தார்.
- சகோதரி நிவேதா தேவியை சந்தித்தபின் பாரதி தீவிரவாதியானார்.
- தம்பி என்று பாரதியாரால் அழைக்கப்பட்டவர்-பரலிநெல்லையப்பர்.
- பாரதியார் ஒர் அவதாரப் புருஷர், இவர் நூலை தமிழர் வேதமாகக் கொள்க எனக் கூறியவர் - பரலி நெல்லையப்பர்.
- பாரதி பாடல்களை நாட்டுடைமை ஆக்கியவர் - ஓமந்தூர் பி. ராமசாமி ரெட்டியார்.
- பாரதிக்கு மகாகவி பட்டம் வழங்கியவர் - ராமசாமி ஐயங்கார்.

- பாரதியின் படத்தை முதன் முதலில் வரைந்தவர் - பாஷ்யம்.
- பாரதியாரின் பாடல்களை முதன் முதலில் வெளியிட்டவர் - கிருஷ்ண சாமி ஐயர்.
- பாரதியை நினைத்து விட்டால் சுதந்திரத்தின் தாகம் சுருக்கென்று ஏறும் எனக் கூறியவர் - நாமக்கல் கவிஞர்.
- தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை, தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ எனக் கூறியவர் - பாரதிதாசன்
- தமிழுக்கு வளஞ்சேர்க்கும் இலக்கியங்களை படைத்தவர் பாரதியார்.
- பாரதியார்கீதையை மொழிபெயர்த்துள்ளார்.
- **பாரதியாரின் முப்பெரும் காவியங்கள்** கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம்

**சிறப்புகள்:**

- காடு கமழ வந்த கற்பூரச் சொற்கோ என்று பாரதியாரை புகழ்ந்து பாடியவர் - பாரதிதாசன்.
- நீடுதுயில் நீக்க பாடி வந்த நிலா என்று பாரதியாரை பாரதிதாசன் பாராட்டியுள்ளார் .
- தமிழ்நாட்டில் தமிழ்ப்புலவன் ஒருவன் இல்லையென வசை நீங்க தோன்றியவர் பாரதி என்று கூறியவர் -பாரதிதாசன்.
- கற்பனை ஊற்றாங் கவிதையின் புதையல், திறம்பட வந்த மறவன், அறம் பட வந்த அறிஞன், என்னவென்று சொல்வேன், என்னவென்று சொல்வேன் தமிழால் பாரதி தகுதி பெற்றதும், தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும் என பாரதியைக் கூறியவர் - பாரதிதாசன்.
- அமெரிக்க கவிஞர் வால்ட்விட்மன், கலீல் கிப்ரான் சாயலில் பாரதியார் வசன கவிதை எழுதினார்.
- பண்டிதர்களின் கரடுமுரடான நடையில் தேங்கிக்கிடந்த தமிழை பலரும் படித்தறியும் வகையில் இனிய பாக்களாக வடித்து உலவவிட்டவர் பாரதியார்.
- தமிழ்மொழி பரவிட விளைந்த தமிழ்ப்பாவலர் பாரதியார்.
- தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்தவர் தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவுதல் வகைசெய்ய வேண்டும் என்றவர் பாரதியார்.
- ஆன்மீக விடுதலை பெண் விடுதலை சமுதாய விடுதலை முதலியவற்றை உள்ளடக்கிய நாட்டு விடுதலையை விளைந்த கவிஞர் பாரதியார்.
- குயில் பாட்டு இசையின் பெருமையை சொல்லும் நூல் .
- பாஞ்சாலி சபதம் வியாசர் எழுதிய மகாபாரதத்தை அடிப்படையாக கொண்டது .
- கட்டுரை மற்றும் கருத்து படங்களால் ஆங்கில அரசை திணறச்செய்தவர் பாரதியார்.
- தமிழுக்குரிய வரலாற்றில் ஒரு புதிய பகுதி பாரதியோடு தொடங்குகிறது .
- உலகம் நிரம்பியிருப்பது இசையால் என்றவர் பாரதியார்.
- இலக்கிய மறுமலர்ச்சியின் காலம் பாரதியார் காலம் ஆகும்.
- மறுமலர்ச்சி பாடல்களின் முன்னோடி மானுடம் பாடும் நெறியே ஆகும்.
- நாடு, மொழி, இறை, பெண்மை முதலிய தலைப்புகளில் பாடல்களை இயற்றியவர் பாரதியார்.
- நமக்கு தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைபொழுதும் சோராதிருத்தல் என்றவர் பாரதியார்.

- ❖ பாரதியார் உரிமைக்காப்பியமாக வடித்தது பாஞ்சாலி சபதம்.
- ❖ சாதி வேரை முளையிலேயே கிள்ளி எய்திட விரும்பியவர் பாரதியார்.
- ❖ பாரதி சங்கத்தை தோற்றுவித்தவர் கல்கி .

## பாவேந்தர் பாரதிதாசன்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | கனக சுப்புரத்தினம் |
| ஊர் | - | புதுச்சேரி |
| பெற்றோர் | - | கனகசபை, இலக்குமி |
| மனைவி | - | பழனி அம்மையார் |
| காலம் | - | 29. 04 . 1891 முதல் 21 . 04 . 1964 வரை |
| இயற்றிய நூல்கள் | - | சஞ்சீவி பர்வதத்தின் சாரல், இசையமுது, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, சேர தாண்டவம், தமிழச்சியின் கத்தி, பிசிராந்தையார், குறிஞ்சிதிட்டு, தமிழியக்கம், பாரதிதாசன் கவிதைகள், மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம், படித்த பெண்கள், இளைஞர் இலக்கியம், திருக்குறள் உரை, புத்தக சாலை |
| சிறப்புபெயர்கள் | - | பாவேந்தர், புரட்சிக் கவிஞர், தமிழ்நாட்டின் இரசூல் கம்சதோவ், இயற்கைக் கவிஞர், தமிழ் கவி, தமிழரின் கவி, தமிழின் மறுமலர்ச்சிக்காக தோன்றிய கவி, தமிழரின் புகழ் மேதினியோங்க பிறந்த கவி. |
| இதழ் | - | குயில் |
| பத்திரிக்கை | - | பகுத்தறிவு, குடியரசு |

**சிறப்புகள்:**

- ❖ தனது 16 வது வயதில் நிரவி அரசு பள்ளியில் ஆசிரியராக பணியைத் துவங்கினார். பின்பு புதுவை அரசினர் கல்லூரியில் (கால்வே கல்லூரி) பேராசிரியராகப் பணியாற்றியவர் - பாரதிதாசன்.
- ❖ 1938 ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற கவிஞர் - பாரதிதாசன்.
- ❖ உருசிய நாட்டின் மாக்கவிஞர் **- இரசூல் கம்சதேவ்**
- ❖ தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை
  வேரில்லாத மரம், கூடில்லாத பறவை **- இரசூல் கம்சதோவ்**
- ❖ நாளை என் தாய்மொழி சாகுமானால் -இன்றே
  நான் இறந்து விடுவேன் **- இரசூல் கம்சதோவ்**
- ❖ இரசூல் கம்சதோவ் போல் சிறந்து விளங்கியவர் - பாரதிதாசன்
- ❖ பாரதியின் மீது கொண்ட பற்றின் காரணமாக தனது பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

- 20 ஆம் நூற்றாண்டின் கவிதை வானில் ஒளிநிலவாய் பவனி வந்த பெருங்கவிஞன் - பாரதிதாசன்.
- அறியாமை இருளில் முடங்கிக் கிடந்த கருத்துக் குருடர்களை ஒளிபெற்று விழிப்புறச் செய்த கவிஞன் - பாரதிதாசன்.
- கொள்கையற்ற கூனர்களை கொள்கை உரம் பெற்று நிமிர்ந்து நிற்கச் செய்த புரட்சிக் கவிஞன் - பாரதிதாசன்.
- தம் வாழ் நாள் முழுவதையும் தமிழின் மறுமலர்ச்சிக்காகவும் வீழ்ச்சியுற்ற தமிழகத்தின் புத்தெழுச்சிக்காவும் தமிழரின் முன்னேற்றத்திற்கு தடைக்கற்களாய் நின்ற அறியாமையையும், மூடப்பழக்கவழக்கங்களையும் உடைத்தெறிந்த கவிஞன் - பாரதிதாசன்.
- வீடெல்லாம், நாடெல்லாம் மக்களின் இதயக்கூடெல்லாம், ஏடெல்லாம் இன்பத்தமிழ் மணக்க வேண்டும் என்று அல்லும் பகலும் அயராது தமிழ்ப்பணியாற்றிய கவிஞன் - பாரதிதாசன்.
- புதுவையில் வெளியான ஏடுகளில் தன்னை கிண்டல்காரன், கிருக்கன் என்ற புனைப் பெயர்களில் கவிதை எழுதியவர் - பாரதிதாசன்.
- சாகித்திய அகாடமி விருது பெற்ற பாரதிதாசனின் நூல் - பிசிராந்தையர் நாடகம்.
- தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் மொழிகளில் புலமை பெற்றவர் - பாரதிதாசன்.
- பாரதிதாசனை "சுப்புரத்தினம் ஒரு கவி" என்றவர் - பாரதியார்.
- மறுமலர்ச்சி கருத்துக்களை தம் பாடல்களின் மூலம் பரப்பியவர் - பாரதிதாசன்.
- ஸ்ரீசுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சார்ந்தவர் சுப்புரத்தினம் என்று பாரதி பாரதிதாசனை ஏற்றுக்கொண்டார்.
- எங்கெங்கு காணினும் சக்தியடா-தம்பிஎன்றவர் பாரதிதாசன்.
- ஏழுகடல் அவள் வண்ணமடா என்ற பாடல் பாரதியின் கவிதா மண்டலத்தைச் சார்ந்த கனகசுப்புரத்தினம் எழுதியது என்று சுதேசியமித்திரனில் வெளியானது.
- பாரதிதாசன் பரம்பரை கவிஞர்கள் - முடியரசன், வாணிதாசன், கம்பதாசன், சுப்புரத்தினதாசன்.
- பிற்காலத்தில் சிறகடித்த வானம்பாடிகளுக்கு முதலெழுத்தும், தலையெழுத்தும் - பாரதிதாசன்.
- தமிழக அரசு பாரதிதாசன் படைப்புகளை1990 ல் நாட்டுடைமையாக்கியுள்ளது .
- தமிழக அரசால் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ள இடம் - திருச்சிராப்பள்ளி.
- குடும்பக்கட்டுப்பாடு பற்றி இந்தியாவிலேயே முதன் முதலில் பாட்டெழுதியவர் - பாரதிதாசன்.
- இரவா இன்ப களஞ்சியங்கள் என அழைக்கப்படுபவை - பாரதிதாசன் கவிதைகள்
- செந்தமிழை செழுந்தமிழாக காண விரும்பியவர் - பாரதிதாசன்.
- என்னரும் தமிழ் நாட்டின் கண் எல்லோரும் கல்வி கற்க வேண்டும் எனக் கூறியவர் - பாரதிதாசன்
- பண்டை நலம் புதுப்புலமை, பழம்பெருமை அத்தனையும் படைப்பாய் இந்நாள் தொண்டு செய்வாய் தமிழுக்கு துறைதோறும் துடித்தெழுந்து துடித்தெழுந்து என்றவர் - பாரதிதாசன்.

- ❖ இன்பத்தமிழ் கல்வி யாவரும் கற்றால் துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் என்று கூறியவர் - பாரதிதாசன்.
- ❖ இரவா புகழுடைய எண்ணற்ற காப்பியங்களை படைத்தவர் - பாரதிதாசன்.
- ❖ வறுமையினால் தமிழன் ஒருவனுக்கு கல்லாத நிலை ஏற்படுமானால் இங்குள்ளோர் நாணிட வேண்டும் என்றவர் - பாரதிதாசன்.
- ❖ தமிழுக்குத் தொண்டுசெய்வோர் சாவதில்லை என்று பாரதியைப் பாடியவர் - பாரதிதாசன்.
- ❖ வெள்ளம் போல் தமிழ்க் கூட்டம் - பாரதிதாசன்.
- ❖ பாவேந்தர் பாடலின் விந்தை எனப்படுவது நிலையாமை பேசப்படுவது .
- ❖ பொதுவுடைமையை வலியுறுத்தும் நூல் -சஞ்சீவி பார்வதத்தின் சாரல்.
- ❖ இயற்கையை வர்ணிக்கும் நூல் - அழகின் சிரிப்பு .
- ❖ கல்வி கற்ற பெண்களின் சிறப்பை கூறும் நூல் - குடும்ப விளக்கு.
- ❖ கல்லா பெண்களின் இழிவைக் கூறும் நூல் - இருண்ட வீடு.
- ❖ பில்கணியத்தின் தழுவல் - புரட்சிக் காப்பியம்.

**பாண்டியன் பரிசு**

- ❖ கதிர்நாட்டு மன்னன்- கதிரைவேலன்
- ❖ மனைவி - கண்ணுக்கினியாள்
- ❖ மகள்- அன்னம்
- ❖ கண்ணுக்கினியாளின் அண்ணண் - நரிக்கண்ணன் (படைத் தலைவன்)
- ❖ கண்ணுக்கினியாள் தோழி - ஆத்தா கிழவி
- ❖ அன்னத்தின் தோழி - நீலி
- ❖ வீரப்பனின் மனைவி - ஆத்தாக்கிழவி, மகன் - வேலன்
- ❖ ஆத்தாக்கிழவியின் மகன் - வேலன்
- ❖ நரிக்கண்ணனின் சூழ்ச்சியால் படையெடுத்து வந்தவன் - வேழ மன்னன்
- ❖ நரிக்கண்ணன் தனது கையாள் எனக் கருதி மணிமுடி, நாட்டின் பட்டயம் இருந்த பேழையை வீரப்பனிடம் கொடுத்தான்.
- ❖ வேழநாட்டு மறவரிடமிருந்து அன்னத்தை காத்தவன் - வேலன்.

**மேற்கோள்:**

- "எனை ஈன்ற தந்தைக்கும், தாய்க்கும் மக்கள்
  இனமின்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
  தினையளவுநலமேனும் கிடைக்குமென்றால்
  செத்தொழியும் நாளும் எனக்குத் திருநாளே"
- "மழையே மழையே வா வா, நல்ல வானப்புனலே வா வா
  தகரப்பந்தல் தணதண என்ன, தாழும் கூரை சளசள என்ன"

- "இனிமை தமிழ்மொழி எமது - எமக்கு
  இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது !"

- எளிய நடையில் தமிழ் நூல்கள் எழுதிடவும் வேண்டும்
  இலக்கண நூல்கள் புதிது புதிதாய் ஈற்றலும் வேண்டும்
- உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே
- தமிழென்று தோள்தட்டி ஆடு
  தமிழ் நல்லதமிழ் வெல்க என தினம் பாடு
- எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
  மங்காத தமிழென்று சங்கே முழங்கு
- செந்தமிழே நறுந்தேனே செயலினை
  மூச்சினை உனக்களித்தேனே
- தமிழே நீயோர் பூக்காடு நானோர் தும்பி
  உள்ளே தொட்டால் உசிரில் இனிக்கும் தமிழ்
- "தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்
  தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
- "இருட்டறையில் உள்ளதடா உலகம்"
- "புதியதோர் உலகு செய்வோம் கெட்ட
  போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்"
- "தூலம் போல்வளர் கிளைக்கு
  விழுதுகள் தூண்கள் ! தூண்கள்" **- அழகின் சிரிப்பு**
- "உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூல்கள்
  ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில் **- தமிழ் வளர்ச்சி**
- "சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
  தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி"
- வாழ்வினில் செம்மையை செய்பவள் நீயே
  (புதுவையின் தமிழ்தாய் வாழ்த்து பாடலாகும்)
- எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
  இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே
- எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான
  இடம் நோக்கி நடக்கின்ற திந்தவையம்
  கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்க

கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்

- கொலைவாளினை எடுடா மிகு
  கொடியோர் செயல் அறவே

- தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின்
  முதலமைச்சராய் வருதல் வேண்டும்

- எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
  இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்

- தேனோக்கும் செந்தமிழே நீ கனி நான் கிளி
  வேறென்ன வேண்டும் இனி

- உறுதி உறுதி ஒன்றே சமூகம்
  என்று எண்ணார்க்கு இறுதி இறுதி

- கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு
  நானோர் தும்பி **- பாரதிதாசன்**

- உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு

- தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடாதே

- நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம்

- வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே

- கல்வியில்லாப் பெண்கள் களர் நிலம்

- பெண்களுக்கு கல்வி வேண்டும் குடித்தனம் பேணுவதற்கே

- அகர முதலி உன்றை நாளும் நீ படித்துவருவாய்

- நிகரில்லா சொற்கள் நினைவில் நன்கு பெறுவாய்
- “கிளையினிற் பாம்பு தொங்க
  விழுதென்று குரங்கு தொட்டு
  விளக்கினைத் தொட்ட பிள்ளை” **- அழகின் சிரிப்பு**

- இணையில்லை முப்பாலுக்கே இந்நிலத்தே

- தொண்டுசெய்து பழுத்த பழம்
  தூயதாடி மார்பில் விழும் **- பெரியாரைப் புகழ்ந்து பாரதிதாசன் பாடியது**

**பாரதிதாசனைப் பற்றிய பிற கவிஞர்களின் புகழுரை:-**

- அறிவுக்கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞன் - புதுமைப்பித்தன்.
- பாரதிக்கு பிறகு தமிழ் நாட்டில் ஒரு உண்மையான கவி என்று கூறியவா-கு.ப.ரா.
- பாரதிதாசன் பாடல்களைப் படிக்கின்ற அந்நியனும் தமிழனாகிவிடுவான் - அ. சிதம்பரநாத செட்டியார்.
- 1946 ஜுலை 29 ல் சோமசுந்தர பாரதியார் தலைமையில் அறிஞர் அண்ணா அவர்களால் பாரதிதாசனுக்கு புரட்சிக் கவி எனும் பட்டமும், 25000 ரூபாய் ரொக்கமும் வழங்கப்பட்டது.
- பாரதிதாசனுக்கு பாவேந்தர் என்ற பட்டம் வழங்கியவர் - பெரியார்.
- 1954 ல் புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவரது பாடல்கள் செக்(பிரெஞ்சு) மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | இராமலிங்கம் |
| ஊர் | - | மோகனூர் நாமக்கல் மாவட்டம் |
| பெற்றோர் | - | வெங்கட்ராமன், அம்மணி அம்மாள் (8 வது மகன் இவர்) |
| வளர்ப்புத்தாய் | - | பதுலாபீவி (முகமதிய பெண்) |
| காலம் | - | 19.10.1888 - 24.08.1972 |
| இயற்றிய நூல்கள் | - | நாமக்கல் கவிஞர் பாடல்கள், தமிழன் இதயம், சங்கொலி, தமிழ்த் தேர், கவிதாஞ்சலி, பிரார்த்தனை, தாயார் கொடுத்த தனம், தேமதுரத் தமிழோசை, அவனும் அவளும், மலைக்கள்ளன், இலக்கிய இன்பம். |
| சிறப்புகள் | - | விடுதலை போராட்ட வீரர், தமிழ் நாட்டின் முதல் அரசவைக் கவிஞர், காந்தியக்கவிஞர், ஆட்சி மொழிக்கவிஞர், காங்கிரஸ் கவிஞர் |
| விருது | - | பத்மபூஷன் |
| இதழ் | - | லோகமித்திரன் |

**சிறப்புகள்:**

- இசைநாவல்கள்-3, தன்வரலாறு-3, மொழிபெயர்ப்புகள்-4, புதினங்கள்-5, சிறுகாப்பியங்கள்-5, இலக்கியத்திறனாய்வுகள்-7, கவிதைத்தொகுப்புகள்-10, கட்டுரைகள்-12 ஆகியவற்றை இயற்றியுள்ளார்.
- இவர் தமிழ்நாடு அரசின் அரசவைக் கவிஞராகவும், சட்ட மேலவை உறுப்பினராகவும் பதவி வகித்தார்.

- “என் கதை” என்று சுய சரிதை எழுதிய கவிஞர் - நாமக்கல் கவிஞர்.
- “இந்திய நாடிது என்னுடைய நாடே, என்று தினந்தினம் நீயதைப் பாடு” - நாமக்கல் கவிஞர் பாடல்கள்.
- நாமக்கல் கவிஞர் பாடல்கள் நூலானது தெய்வத் திருமலர், தமிழ்த் தேன்மலர், காந்திமலர், தேசிய மலர், சமுதாய மலர், பெரியோர் புகழ் மலர், திருநாள் மலர், சிறுகாப்பிய மலர், இசை மலர், அறிவுரை மலர், பலசுவை மலர்என்ற 11 தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ளது.
- முத்தமிழிலும் ஓவிய கலையிலும் வல்லவர் - நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்.
- முதன்முதலாக வரைந்த ஓவியம் -இராம கிருஷ்ண பரமஹம்சர்.
- ஐந்தாம் ஜார்ஜ் மன்னனுக்கு பாரத மாதா முடிசூட்டுவது போல் ஓவியம் வரைந்து தங்கப் பதக்கம் வென்றவர் - நாமக்கல் கவிஞர்.
- 1932ல் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கு பெற்று ஓராண்டு சிறை தண்டனை பெற்றவர் - நாமக்கல் கவிஞர்.
- சாகித்திய அகடாமியில் தமிழ் பிரதிநிதியாக பணியாற்றியக் கவிஞர் - நாமக்கல் கவிஞர்.

**மேற்கோள்:**

- கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது
  சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாவரும் சேருவீர் **- உப்பு சத்தியாகிரகப் பாடல்**

- தமிழன் என்றோர் இனமுண்டு
  தனியே அவற்கொரு குணமுண்டு
  அமிழ்தம் அவனது மொழியாகும்
  அன்பே அவனது வழியாகும்

- இந்திய நாடிது என்னுடைய நாடே
  என்று தினம்தினம் நீயதைப் பாடு

- பாட்டாளி மக்களது பசி தீர வேண்டும்
  பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்

- கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
  கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
- அன்பும் ஆர்வமும் அடக்கமும் சேர்ந்தும்
  உண்மைத் தன்மையும் உறுதியும் மிகுந்தும்

- கூட்டுறவில் சேருங்கள் கூடி வாழ பழகுங்கள்

- தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா

- புரட்சி வேண்டும் புரட்சி வேண்டும்
- காந்தியை மறக்காதே என்றும்
  சாந்தியை இழக்காதே
  காந்தியம் நம் உடமை
  அதைக் காப்பது நம் கடமை

**புகழுரை:**

- தமிழ்நாடு அரசு இவரது நினைவில்லத்தை நாமக்கல்லில் நிறுவியுள்ளது.
- தலைமைச் செயலகத்தின் பத்துமாடிக் கட்டிடத்திற்கு இவரது பெயரைத் தமிழக அரசு சூட்டியுள்ளது.
- திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது, காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராக தோன்றியது -இராஜாஜி.

## கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

| | | |
|---|---|---|
| ஊர் | - | தேரூர் கன்னியாகுமரி |
| பெற்றோர் | - | சிவதாணுபிள்ளை, ஆதிலட்சுமி |
| காலம் | - | 27.08.1876 முதல் 26.09.1954 வரை |
| இயற்றிய நூல்கள் | - | மருமக்கள் வழி மான்மியம், ஆசிய ஜோதி, உரைமணிகள், மலரும் மாலையும், உமர்கய்யாம், குழந்தைச் செல்வம், காந்தளூர் சாலை, தேவியின் கீர்த்தனைகள், மனோன்மணியம் மறுபிறப்பு திறனாய்வு கட்டுரை (1922ல் வெளியானது) |
| சிறப்பு பெயர்கள் | - | கவிமணி, தேவி |
| மனைவி | - | உமையம்மை |
| ஆசிரியர் | - | சாந்தலிங்க தம்பிரான் |
| பணி | - | தொடக்கப்பள்ளி ஆசிரியர், கல்லூரிப் பேராசிரியர் |

**சிறப்புகள்**

- ❖ தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மும்மொழிகளில் புலமைப்பெற்றவர் - கவிமணிதேசிய விநாயகம் பிள்ளை.
- ❖ வெண்பா இயற்றுவதில் வல்லவர். சிறந்த குழந்தைக் கவிஞர்.
- ❖ 24.12.1940 ல் சென்னை மாநில தமிழ்ச் சங்கத்தால் உமா மகேசுவரனார் தலைமையில் கவிமணி என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர் - தேசிய விநாயகம் பிள்ளை.
- ❖ தமிழின் முதல் குழந்தைக் கவிஞரான இவர் தேவி என்னும் ஆங்கில பாடலை தமிழில் குழந்தை என்னும் தலைப்பில் மொழி பெயர்த்தவர் - தேசிய விநாயகம் பிள்ளை.
- ❖ மருமக்கள் வழி மான்மியம் - நகைச்சுவை பாடல் ஆகும்.
- ❖ உமர்க்கய்யாமின் கவிதைகள் மக்கள் அடையும் இன்பதுன்பங்களையும், இறைவனது படைப்பையும் பாடுபொருளாக கொண்டு இயற்றப்பட்ட நூலாகும்.
- ❖ உமர்கய்யாம் 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகக் கவிஞர் ஆவார்.
- ❖ உமர்கய்யாம் முழுப்பெயர் - கியாசுதீன் அபுல்பாத் உமர்கய்யாம்.

- ❖ கணிதம், வானவியலில் புலமை மிக்க பாரசீகக் கவிஞர் - கியாசுதீன் அபுல்பாத் உமர்கய்யாம்.
- ❖ உமர்கய்யாமின் பாரசீக கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் - பிட் ஜெரால்டு.
- ❖ எட்வர்ட் பிட் ஜெரால்டால் மொழி பெயர்க்கப்பட்ட ஆங்கில கவிதைகளைத் தமிழில் உமர்கய்யாம் பாடல்கள் என மொழி பெயர்த்தவர் - கவிமணி.
- ❖ இம்மை மறுமை பற்றி ரூபாயத் என்ற பெயரில் உமர்கய்யாம் எழுதிய செய்யுளின் மொழிபெயர்ப்பு நூல் - உமர்கய்யாம் பாடல்கள்.
- ❖ ரூபாயத் என்றால் நான்கடிச் செய்யுள் என்று பொருள்.
- ❖ கவிமணி எழுதிய உமர்கய்யாம் பாடல்கள் என்ற நூலில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை - 115 பாடல்கள்.
- ❖ எட்வின் அர்னால்டு எழுதிய **The light of Asia**என்ற நூலினை ஆசிய ஜோதி என்னும் பெயரில் மொழி பெயர்த்தவர் - தேசிய விநாயகம் பிள்ளை.
- ❖ கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை எழுதிய கவிதைத் தொகுப்பு - மலரும் மாலையும்.
- ❖ கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை எழுதிய எள்ளல் நூல் - மருமக்கள் வழி மான்மியம்.
- ❖ கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை எழுதிய வரலாற்று நூல் - காந்தளூர் சாலை.
- ❖ கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை எழுதிய இசைப் பாடல் - தேவியின் கீர்த்தனைகள்.

**மேற்கோள்:**

**<u>கவிமணியின் கவிதைகள் :</u>**

- மங்கையராய் பிறப்பதற்கே நல்ல
  மாதவம் செய்திட வேண்டுமம்மா **- கவிமணி**

- சாலைகளில் பல தொழில்கள் பெருகவேண்டும்
  சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும் **- கவிமணி**

- “யாரும் சிறியர் யான் பெரியன்
  எதிலும் சிறந்தது என்னலமாம் **- உமர்கய்யாம் பாடல்கள்**

- அன்பு செய்யின் அயலாரும்
  அண்டி நெருங்கும் உறவினராம் **- உமர்கய்யாம் பாடல்கள்**

- ஆழி சூழும் உலகாளும்
  அரசனாக வேண்டுமெனில் **- உமர்கய்யாம் பாடல்கள்**

- “உள்ளத்துள்ளது கவிதை -உண்மை
  உருவெடுப்பது கவிதை
  தெள்ளத் தெளிந்த தமிழில் -உண்மை

தெரிந்துரைப்பது கவிதை" **- கவிமணி கவிதைகள்**

- செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை
  நெஞ்சகமே சிந்தனை செய்வாய் தினம்
  நீதித் திருக்குறளை நெஞ்சாரத் தம் வாழ்வில்
  ஓதித் தொழுது எழுது ஓர்ந்து **- கவிமணி**

- ஓடும் உதிரத்தில் - வடிந்து
  ஒழுகும் கண்ணீரில்
  தேடிப் பார்த்தாலும்- சாதி தெரிவதுண்டோ **- கவிமணி**

- பாட்டுக்கோர் புலவன் பாரதியடா அவன்
  பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினானடா **- கவிமணி**

- தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு
  அங்குத் துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி **- கவிமணி**

- வெய்யில் கேற்ற நிழலுண்டு வீசும் தென்றல்
  காற்றுண்டு கம்பன் கவியுண்டு கையில் - மதுவுண்டு **- கவிமணி**

**கவிமணி தேசியம் விநாயகம் பிள்ளைப் பற்றிய புகழுரை:-**

- தேசிய விநாயகத்தின் கவிப்பெருமை, தினமும் கேட்பது என செவிப் பெருமை - நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை.
- கவிமணியின் கவிதைகளை புரிந்து கொள்வதற்கு பண்டிதராய் இருக்க வேண்டியதில்லை, படிக்கத் தெரிந்திருந்தால் போதும், எவரும் அறிந்து கொள்ளும் எளிய நடை - டி.கே.சண்முகம்.